மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராஜபாளையம்
உயர்திரு. A. ராமநாதன்,B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி , இராஜபாளையம்
2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ம் நாள் வெள்ளிக்கிழமை
அசல் வழக்கு எண். 121/2024

சண்முகப்ரியா. –– வாதி

/எதிர்/

1. முத்தூட் பைனான்ஸ் அதன் மேலாளர் மூலம்.
2. கிராமின் கூட்டா பைனான்ஸ் அதன் மேலாளர் மூலம்.
3. DVARA குழு அதன் மேலாளர் மூலம்.
4. கிராம விடியல் பைனான்ஸ் அதன் மேலாளர் மூலம்.
5. அரைஸ் இன்வஸ்ட்மென்ட் மற்றும் கேபிடல் லிமிடெட் அதன் மேலாளர் மூலம்.
6. மகளிர் மைக்ரோ பிரைவேட் கேபிடல் லிமிடெட் அதன் மேலாளர் மூலம்.
7. இசாப் Small Finance Bank அதன் மேலாளர் மூலம்.

–– பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 03.07.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ஆனந்தன் அவர்கள் ஆஜராகியும், 4ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.சிவசுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும், 6ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.V.சொர்ணலதா அவர்கள் ஆஜராகியும், 1, 7 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக்கப்பட்ட நிலையில், 2, 3, 5 பிரதிவாதிகள் படிமெமொ செலுத்தாத நிலையில், வாதி தரப்பில் விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகாத நிலையில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**தீர்ப்புரை**

இந்நிர் வாதியிடமிருந்து, இந்நிர் பிரதிவாதிகளுக்கு வரவேண்டிய தவணைத் தொகைகளை, இந்நிர் பிரதிவாதிகள் சட்டப்படி உரிய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றும் (Due Process of law), சட்டத்திற்கு புறம்பாக கந்து வட்டி கேட்டு கூடுதலாக பணம் பறிக்கும் எண்ணத்துடன் இந்நிர் பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ மற்ற எவருமோ அடியாட்கள் மூலமாகவோ, மற்ற எவ்வகையிலோ இந்நிர் வாதியை மிரட்டியோ, அச்சுறுத்தியோ வசூல் செய்ய கூடாது என இந்நிர் பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு நிரந்தர நிலையுறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்கும் படிக்கும், இவ்வழக்கின் செலவுத் தொகைகளை இந்நிர் வாதிக்கு இந்நிர் பிரதிவாதிகள் செலுத்தும்படியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வாதி தரப்பில் U/O X CPC–ன் படி விசாரணைக்கு அழைத்தும் ஆஜராகாமலும், மேலும் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால், தாவா வழக்கானது வாதியின் வருகையில்லா தவறுகைக்காக தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. (இரு தரப்பிலும் செலவுத் தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMANATHAN Digitally signed by RAMANATHAN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இராஜபாளையம்.